**சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(04-11-2015 – 08-11-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 03-11-2015

**கடந்த கால வானிலை 30-10-2015 முதல் 02-11-2015 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 49.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 7-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 69-95 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 0-8 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 08-11-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **04.11.15** | **05.11.15** | **06.11.15** | **07.11.15** | **08.11.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 12 | 10 | 14 | 12 | 12 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30 | 30 | 30 | 30 | 30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 83 | 84 | 87 | 85 | 86 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 83 | 84 | 80 | 82 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**குறுஞ்செய்தி:**

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான மறறும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், எள்ளு, பருப்பு வகைகள் மற்றும் கரும்பு**
**பருவம்: நெல்- தூர் கட்டும் நிலை, எள்ளு- வளர்ச்சி பருவம்**

- சொட்டுநிர் பாசனம் மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேவைகளைக் குறைக்கலாம்.
- நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் 20 இ.சி. 500மி.லி. / ஏக்கர் அல்லது புரபனோபாஸ் 50 இ.சி. ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
- நெல் பயிரைத் தாக்கும் மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணை 2% அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% அல்லது தையோமீத்தாகசம் 25 WG லிட்டருக்கு 0.6 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.
- நெல் நாற்றங்காலை நன்றாக கவனித்து நெற்பயிரில் குலை நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தென்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த Carbendazim or bavistin @ 2.0gram/litre of water என்ற அளவில் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.